[1978 மார்ச் 22

நீர் வழங்கு திட்டங்கள்.

*665 வின—திரு. கே. உச்சி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கூடலூர், கோவை, ஈரோடு, மேட்டுப்பாளையம், உதகை, குன்னூர், கோத்தகிரி ஆகிய பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாட்டைப்போக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கோவை நகர், மற்றும் 18 சுற்றுப்புற நகரங்கள், 9 வழியோரக் கிராமங்களுக்கான சிறுவாணி குடிநீர்த் திட்டம், ஈரோடு, குன்னூர் நகராட்சிகளுக்கான குடிநீர் மேம்பாடு திட்டங்கள் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேட்டுப்பாளையம், உதகமண்டலம் நகராட்சிகள் மற்றும் கோத்தகிரி பேரூராட்சிக்கான குடிநீர் மேம்பாடு திட்டங்கள் முடிக்கப்பட்டுவிட்டன. கோவை நகரின் தாற்காலிக குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க 1976—77 நிதியாண்டில் ரூ.5,07,000 செலவில் 16 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன.

ஊரகக் குடிநீர் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களில் இதுவரை 690 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டு (1977—78) இறுதிக்குள் மேலும் 207 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்படவுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம், கோத்தகிரி, கூடலூர், குன்னூர் ஊராட்சி ஒன்றியங்களில் 45 குடியிருப்புகளுக்கு நடப்பு நிதியாண்டுக்குள் ரூ. 5 இலட்சம் செலவில் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, கூடலூர் பகுதியில் எப்போதும் தண்ணீர்ப் பற்றுக்குறை உண்டு என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, பக்கத்தில் உள்ள ஓவாலி மலைப் பகுதியில் நீர்த்தேக்கம் கட்டி, தண்ணீர் பற்றுக்குறையை என்றென்றும் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி ஆகிய பேரூராட்சிகளுக்குக் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க வறட்சி நிவாரணப்பணிகளின்கீழ் எந்தப்பணியும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும் நடப்பாண்டில், 1977—78-ல் இந்தப் பேரூராட்சிகளில் 45 குடியிருப்புகளுக்குக் கிராமக் குடி நீர்த்திட்டத்தை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1978 மார்ச் 22]

திரு. போ. கோபாலன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பெரும்பாலும் மலைச்சாரலில் ஓடும் சிற்றாறுகளிலிருந்துதான் குடி தண்ணீர் எடுக்கிறார்கள். அந்தச் சிற்றாறுகளின் கரையோரங்களில் வன இலாக்காவிலிருந்து ஏராளமாக யூகலிப்டஸ் மரங்களை நடுகிறார்கள். அந்த மரங்கள் பெரும்பாலும் நீரை உறிஞ்சிக் குடித்துவிடுகின்றன. அதனால் வறட்சி ஏற்படுகிறது. ஆகவே, இனிமேல் சிற்றாறுகளின் ஓரங்களிலும் அதை ஒட்டிய பகுதிகளிலும் அந்த மரங்களை நடாமலிருக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதுபற்றித் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, கூடலூர் பகுதிகளிலும் மற்ற சில பகுதிகளிலும் தண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்க புதிய திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் புதிய திட்டம் எவ்வளவு ரூபாய்க்கான திட்டம் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நிறைவேற்ற இருக்கும் கிராமக் குடிநீர்த் திட்டம் 10 லட்சம் ரூபாய்க்கும் குறைவாக இருந்ததால் இப்பணியை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்களால் நிறைவேற்றப்படுவதைவிட வட்டார வளர்ச்சி அலுவலரிடம் ஒப்படைத்து நிறைவேற்றுவதே சிறந்தது என்று முடிவு செய்யப்பட்டது. இம்முறையில் நிறைவேற்றப்படுவதன் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலகப் பணியாளர்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவர்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை மாநகராட்சியில் இணைந்துள்ள சிங்காநல்லூர் நகராட்சியில் மிகுந்த தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்தது, தனியார் கிணறுகளிலிருந்து நூற்றுக்கணக்கான வண்டி தண்ணீரை வெளியே இருந்து கொண்டுவரப்படவேண்டிய கஷ்டம் இருக்கிறது. இந்தக் கஷ்டத்தைப் போக்க அங்கே மேல் நிலை நீர்த்தொட்டி கட்டி, அதிலிருந்து குழாய்கள் மூலம் வார்டுகளுக்குத் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதுபற்றித்தனிக் கேள்வி போட வேண்டும். இருப்பினும் சிறுவாணித் திட்டத்தின் பலனை அடையும் 18 ஊர்களைச் சொன்னேனே, அதில் சிங்காநல்லூரும் ஒன்று.